மாண்புமிகு திரு. க. இராசாராம் : விரிவாக்கவில்லை என்று நான் எங்கும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. நிறைய வீடுகளைக் கட்டிக்கொண்டு வருகிறோம். முன்னால் தனிப்பட்ட வீடுகள் தொழிலாளர்களுக்குக் கட்டப்பட்டு வந்தன. இப்போது இடத்தின் அதாவது நிலத்தின் விலை ஏறிக்கொண்டிருப்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே தொழிலாளர்களுக்குத் தனிப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக மாடி வீடுகள் கட்டவேண்டுமென்று அரசு விரும்புகிறது. தொழிலாளர் நல இலாகாவும் விரும்புகிறது. ஏற்கனவே இருக்கிற வீடுகளை இடித்துக் கட்டவேண்டிய ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. பழுதடைந்த வீடுகள் சிலயிடங்களில் இருக்கின்றன. அந்தத் தொழிலாளர்கள் அந்த வீடுகள் தங்களுக்குச் சொந்தமாக இருப்பதுபோல் பாவித்து காலதாமதத்தை ஏற்படுத்துகிறார்கள். அந்தச் சூழ்நிலை மாறுமானால் நிரம்ப வீடுகள் கட்ட முடியும். நிறைய வீடுகள் ஏற்கனவே கட்டிக் கொண்டும் வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி : தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே வீடுகள் கட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்கள் வீட்டு வசதி வாரியத்துக்குக் கடிதம் எழுதினால் வீட்டுவசதி வாரியம் ஒப்புக்கொண்டு அங்கு வீடுகளைக் கட்டலாம் அல்லவா ? அதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஏற்கனவே மதுரையில் கூட ஒரு ஆலை அதிபர் தன் நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். வீட்டு வசதி வாரியம் தொழிலாளர்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொண்டு வருகிறது. தனியாக தொழில் அதிபர்கள் தொழிலாளர்களுக்காக வீடுகள் கட்டினால் 50 சதவீதம் கடனும், 25 சதவீதம் உதவித் தொகையும் ஆட்சி அளித்து வருகிறது.

பீடித் தொழிலாளர்கள்

***640 வினா—திரு. ஜி. ராமசாமி :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய விதம் வரையறுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

1974 மார்ச் 27]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1—7—1973 முதல், பீடித் தொழிலாளர்களுக்கு, குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் மாநில முழுமைக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது வட ஆர்க்காட்டில் உள்ள நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

***641 வினா—திரு. என். டென்னிஸ் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும், பீடித் தொழிலாளர்கள் டிசம்பர் 6, 1972 தினத்தை கோரிக்கை நாளாக அனுஷ்டிக்க முடிவு செய்திருப்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அவர்கள் கோரிக்கையை பரிசிலனை செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) பீடித் தொழிலாளர்கள் பத்து கோரிக்கைகளை விடுத்தனர். அவற்றில் தென் மாநிலங்களிலுள்ள பீடித் தொழிலாளர்களுக்கு 1,000 பீடிகள் சுற்றுவதற்கு ரூ. 5.50 என்ற ஒரே சீரான கூலி நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பதும், பீடி, சுருட்டுத் தொழிலாளர் (வேலைவாய்ப்பு நிபந்தனைகள்) சட்ட சம்பந்தமான சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து புது டில்லி தலைமை நீதிமன்றத்தில் வழக்காட வேண்டும் என்பதும் முக்கியமான கோரிக்கைகள் ஆகும். 17—1—1973-ல் புது டில்லியில் நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவினையொட்டித் தமிழ்நாடு அரசு பீடித் தொழிலாளர்களுக்கான குறைந்தளவு ஊதிய விகிதங்களை 1-7-73 முதல் தகுந்தவாறு மாற்றி அமைத்தது. பீடி, சுருட்டுத் தொழிலாளர் (வேலைவாய்ப்பு நிபந்தனைகள்) சட்டம் செல்லுபடியாகும் என்று தலைமை உயர்நீதி மன்றம் தற்போது தீர்ப்பளித்து உள்ளது.

திரு. என். டென்னிஸ் : தற்போது பல பீடித் தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அதனால் தொழிலாளர்கள் பலர் வேலை இழந்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குத் தொழில் வாய்ப்பு ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன தீவிர நடவடிக்கைகள் எடுக்கும்?